**செய்தி வெளியீடு எண்: 276** **நாள் : 10.06.2014**

பத்திரிக்கைச் செய்தி

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், சென்னை, தங்கசாலை, பொது விநியோகத் திட்ட கிடங்குகளில் இன்று 10.06.2014 காலை, மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் இரா.காமராஜ், அவர்கள் திடீர் ஆய்வு மேற்கொண்டார்.

கிடங்குகளில் சேமிப்பில் வைக்கப்பட்டிருந்த விலையில்லா திட்ட அரிசி, கோதுமை, சிறப்பு பொது விநியோகத் திட்ட துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு ஆகியவை நிர்ணயிக்கப்பட்ட தரத்தில் இருப்பதை ஆய்வின்போது மாண்புமிகு அமைச்சர் உறுதி செய்தார். அனைத்து அத்தியாவசியப் பொருட்களும் போதுமான அளவில் கையிருப்பில் உள்ளதாகத் தெரிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள், நியாயவிலை அங்காடிகளுக்கு வழங்கப்படும் பொருட்கள் குறித்த நேரத்தில், மாவட்ட ஆட்சியரால் அங்கீகரிக்கப்பட்ட வழித்தடத்தில், உணவுப் பொருள் வழங்கல் துறையின் மூலம் வழங்கப்படும் மாதாந்திர ஒதுக்கீட்டுக்குட்பட்டு, நகர்வு செய்யப்பட வேண்டுமென்றும், ஒவ்வொரு மாத இறுதிக்குள் 60% பொருள்கள் அங்காடிகளுக்கு முன்நகர்வு செய்யப்பட வேண்டுமென்றும், மீதமுள்ள 40% பொருள்கள் ஒதுக்கீட்டு மாதத்தின் 05ம் தேதிக்குள் நகர்வு செய்து முடிக்கப்பட வேண்டுமென்றும் கிடங்கு பொறுப்பாளர்களை மாண்புமிகு அமைச்சர் அறிவுறுத்தினார். அம்மா உணவகங்கள், அரசு விடுதிகள், மருத்துவமனைகள், காப்பகங்கள் ஆகியவற்றுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் பொருள்களை மீண்டும், மீண்டும் உரிய தர பரிசோதனை செய்த பின்னரே வழங்க வேண்டுமென்று தரக்கட்டுப்பாட்டு அலுவர்களை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்.

மேலும் கிடங்கு வளாகத்தில் இயங்கி வரும் எடைப்பாலத்தை (Weigh Bridge) ஆய்வு செய்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள், லாரிகளை மறு எடை செய்து, சரியான எடையிட்டு பொருள்கள் வழங்கப்படுவதை உறுதி செய்தார். மின்னனு எடைத் தாரசுகளில் எடையிட்டு கூட்டுறவு அங்காடிகளுக்கு வழங்கப்பட்ட அத்தியாவசியப் பொருள்களின் எடையை, மறுஎடை செய்து சரிபார்த்தார். அத்தியாவசியப் பொருள்கள் எடையிட பயன்படுத்தப்படும் மின்னணு தராசுகள் அவ்வப்போது பரிசோதனை செய்யப்பட்டு பழுது ஏதுமின்றி உபயோகப்படுத்த வேண்டுமென்று அலுவலர்களை கேட்டுக் கொண்டார்.

கிடங்கு வளாகத்தினுள் அமையப் பெற்றுள்ள மண்ணெண்ணெய் வழங்கு நிலையத்தை ஆய்வு செய்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள், குடும்ப அட்டைதாரர்களிடம், ஒவ்வொரு மாதமும் மண்ணெண்ணெய் சீரான முறையில் விநியோகம் செய்யப்படுவதை கேட்டு அறிந்தார்.

இந்த ஆய்வின் போது உணவுப்பொருள் வழங்கல் துறை ஆணையாளர் திரு.சு.கோபாலகிருஷ்ணன்,இ.ஆ.ப., தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நிர்வாக இயக்குனர் திரு.எம்.சந்திரசேகரன்,இ.ஆ.ப., மற்றும் சென்னை முதுநிலை மண்டல மேலாளர் திருமதி .எஸ்.நிர்மலா ஆகியோர் உடனிருந்தனர்.

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**